உ

சிவமயம்



# மீனாட்ச்சி அம்மன் அருட்பாமாலை

தொகுப்பு:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கணேச காயத்ரி

ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி தன்னோ
புத்தி ப்ரசோதயாத்

திருச்சிற்றம்பலம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம் தம்பாமற் சார்வார் தமக்கு

# மாட்டுப்பளை மடத்துப்பிட்டி
## ஆலையடியுறை



# அருள் மீனாட்சி அம்மன்
## அருட்பாமாலை

ஆக்கம்: புலவர் நாகமணி விநாயகமூர்த்தி
சேனைக்குடியிருப்பு

ஈஸ்வரிவெளியீடு 35
15-3-2013

விலை: 200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

## என்னுரை

**பெரியோர்களே**

கிழக்கிலங்கையில் தென்புறத்தே அக்கரைப்பற்று கல்முனை வீதியில் மேற்குப் புறமாக அட்டப்பள்ளம் எனும் இடத்தே அமைந்துள்ளதே இந்த மீனாட்சியம்மன் ஆலயம் இற்றைக்கு 500 நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ் மன்னனான ஸ்ரீ வன்னிய ராஜசிங்கன் ஆட்சிக் காலத்தில் சிங்கார புரி என அழைக்கப்படும் (தற்பொழுது அட்டப்பள்ளம்) இராசதானியை அரசு செய்தனன் இம்மன்னனின் மனைவி கோதை அம்மையாரினால் உருவாக்கப்பட்டதே இவ்வாலயம். வன்செயல் இனக்கலவரத்தால் அழிவுற்ற இவ்வாலயம் தூர்ந்துபோய் புதர்களால் சூழப்பட்டு நாகங்களினால் பாதுகாக்கப்பட்டு வருவது கண்கூடு சென்ற ஆண்டு (2010) குடச்சித்தரால் லிங்கம் ஒன்று எடுத்து மக்கள் வணங்குவதற்கு ஆலயத்தின் எதிர் வைத்திருப்பதையும் மேலும் பல மரகதலிங்கம் மீனாட்சி அம்மன் சிலைகளும் இருப்பதாக சித்தர் தெறிவித்துள்ளார்.

**அன்பர்களே**

அம்மனின் அற்புதங்களால் உந்தப்பட்ட மெய்யடியார்களும் தேவி மீது நம்பிக்கை கொண்ட நல்லடியார்களும் தாயே நீதான் கெதி என்ற தாய் மார்களும் மீனாட்சி தலம் வந்து கண்கலங்கி கதறி அழும் கன்னிகை தங்களுக்கு தாங்கள் கேட்டவரம் கொடுக்கின்ற தெய்வம் இந்த மீனாட்சி அம்மனாகும். இத்தாயின் கடாட்சசத்தால் அன்னதானங்கள் தொண்டு புரிதல் அறப்பணி செய்தல் இன்னும் பல சேவைகள் இங்கு நடைபெற்று வருகின்றன. எனவே இதைக்கண்ணுற்ற தாங்கள் வாரத்தில் ஒரு தரமாவது மடத்து மீனாட்சி அன்னையின் ஆலயம் வந்து அருள் பெற்று வாழ்வீர்கள் என்பதோடல்லாது அன்னைமீது அருட்பாக்கள் பாடி வெளியிட அடியேனைத் தூண்டிய அன்பு உள்ளங்களுக்கு எனது நல்லாசிகளும் தேவியின் திருவருளும் கிடைக்க பணிகின்றேன்.

**அடியார்களே**

மீனாட்சி அம்மனின் அகவல் காவியம் அருள்மாலை சரணம் எனப் பலபாடல்களை இணைத்து இத் தொகுப்புக்கு மீனாட்சியம்மன் அருட்பாமாலை எனத் திருநாமம் சூட்டியிருக்கிறேன்.தாங்களும் பக்தியோடுபாடி அன்னையின் அருள் பெற்று வாழ்வீர்கள் எனக் கேட்டுக்கொண்டும் இந்த அருட்பாமாலையை எம் தாயான மீனாட்சி அம்மனுக்கே சூடி மனநிறைவு அடைகிறேன்.

### சமர்ப்பணம்

வற்றாத ஊற்றைப்போல பலவரிமுத்துச் சொற்கள் தந்து
கற்றார்க்கு முன்னே பாடல் கருத்துற்று மிளிரவைத்த
நிற்றிடை மடந்தை நன்னாள் சீர்பெறுமடத்துப்பிட்டி
நாற்றிசை போற்றும் மீனாட்சி அன்னைக்கே சூடுகின்றேன்.

சேனைக்குடியிருப்பு
கல்முனை
15.03.2013

**வணக்கம்**

அன்புடன் அருள்மாலை
சூட்டி மகிழும் அன்பன்
நாகமணி வினாயகமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மீனாட்சி அம்மன் அகவல்

திருச்சிற்றம்பலம்

அன்னையே உந்தன் அடியினை தொழுதேன்
என்னையும் தாயே ரெட்சித் தாழ்வாய்
முன்னை நிகரோன் மூசிக வாகனன்
தன்னைத் துதித்து தாய் மீதகவல்
ஓதிட நீயும் உதவிடு கணேசா
பின்னம் வாராமல் பிழை பொறுத் தாழ்வாய்
என்று பல கால் இறைஞ்சித்துதித்து
தும்பி முகவன் துணை தந்தருளே

உமையே எங்கும் ஒளிர்விடும் சுடரே
அமைவாய்ப் பாரில் அனைத்தையும் காக்கும்
கண்ணே மணியே கருத்தே ஊற்றே
பெண்ணே மயிலே பித்தன் துணைவி
மரகதவல்லி மதுரை மீனாட்சி
அங்கயற் கன்னி அகிலாண்டேஸ்வரி
சுந்தரவல்லி துடியிடைநாச்சி
தாடகப் பிராட்டி தக்கன் மகளே
சுந்தர ரேசன் துணையே உமையே
ஆளுடைநாச்சி அபிராமவல்லி
பாண்டியன் பிராட்டி பதுமைப் பெண்ணே
வேண்டிப் பணிந்தேன் வித்தகிஉன்னை
மாட்டுப் பளையாம் மடத்துப் பிட்டி
குடி கொண்டிருக்கும் கோமகள் நீயே
ஆலை நிழலில் அமர்ந்த என் தாயே
சாலைகள் இன்றித் தனித்திருந்தவளே
சோலையில் வந்து துதிப்பவர் தமக்கு
வாலையாகி வரங்கள் கொடுப்பாய்
சேடன் உறையும் செம்புற்றினுள்ளே
மரகதலிங்கம் வைத்திருப்பவளே
ஆலவிழுதில் ஆடிடும் தேவி
நாகமுனக்கு நற்தாலாட்டும்
கன்னிகள் வாழக் கண் பாரம்மா
வண்ண மகளே மனம் குளிரம்மா
ஏழை எளியோர் எந்தாய் உந்தன்
வாசல் பெருக்க வரம் தா தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமர் நெஞ்சில் உறையும் தேவி
பக்தர்கள் தம்மை பரிவுடன் காப்பாய்
உன்னைப் பணிய ஓடிட வினைகள்
பில்லி வஞ்சனை பிசாசுடன் சாத்தான்
உன் நீறது கண்டால் நில்லாதோட
மஞ்சள் படவே மாற்றார்ரெல்லாம்
கண்டு பயந்து கழலடி பணிய
தொண்டரக் கென்றும் துணையாயிரம்மா
குங்குமஞ் சூடக் கொடைதா தாயே
மங்கல நாணை மகிழ்ந்தே அளித்திடு
பசும்பொன் மேனியும் பவழவாயும்
அழகு முகம் அசையாவிழியும்
முத்து முடியும் முறுவல் சடையும்
கத்தும் கிளியும் கரத்தில் இருக்க
பச்சை மரகத பட்டு உடையும்
கரைகள் பலநிறக் கண்ணை மறைக்க
பாதக் கொலுசு பண்ணொலி செய்ய
நாத இசையும் நலம்பெற மேளம்
இங்கு ஒலிக்க எந்தாய் வாவா
பொங்கல் பூசை பூமடை தந்தோம்
அங்கயற் கன்னி அம்மா வாவா
திங்கள் ஒளியே தேவே வாவா
மங்கா மிளிரும் மாதவனோடு
இங்கு எளுந்து ஏளையற்கருளை
தங்கு தடையறத் தாயே தாதா
சதங்கை ஒலியும் தாள இசையும்
முழங்குதம்மா முன்னே வாவா
வாவா தாயே மதுரை மீனாட்சி
ஆலையடியுறை அம்மையே போற்றி
மடத்துப்பிட்டி வாழ்மங்கயற்கரசி
சரணம் தாயே உன் தாழினை சரணம்
சரணம் சரணம் சங்கரன் துணையே
சரணம் சரணம் சற்பம் அணிவோய்
என் தாய் உந்தன் இரு தாழ் சரணம்
சரணம் அம்மா சரணம் தாயே

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சி அம்மன் காவியம்

திருச்சிற்றம்பலம்

## துதி

அவலுடன் சர்க்கரையும் அன்பான மோதகமும்
சிறுதட்டில் பொங்கல் பழம் உன் முன்வைப்பேன் - எந்தனையும்
கண்ணாயிரம் கொண்டு காத்தருள் செய் நாவலடி
வினாயகனே பண்ணோடு காவியம்யான் பாடுதற்கே

## காவியம்

01 வரமருள் விநாயகன் மலரடி துதித்து
மங்காத கண்ணகையை மனம்தனில் நிறுத்தி
அருள் தரும் உகந்தைப் பதியிலுறை முருகனை
அடிதொழுது அன்னை மீனாட்சிமீதகவல்
உரைபகர சிவமுத்து மாரி பரிகலமும்
உதவியருள் சிவசுதனே ஓங்காரப்பொருளே
கரைகாணாத் தமிழ் அமிர்த மொழி எனக்கருள்வாய்
கற்பகப் பிள்ளையே தாண்யடியப்பா

02 அப்பனே ஆலவாய் அண்ணலே மதுரை
ஆண்ட நற்சுந்தர பாண்டிய மன்னா
செப்பமுடன் மீனாட்சிக் கிடப்பாகம் ஈந்த
திருவெற்றியூரனே சிவபெருமானே
சுப்பனே மாட்டுப்பளை மடப்பிட்டி உறையும்
சோதியாய் நின்றருள் மீனாட்சியம்மா
எப்பொழுதும் இடர்வாரா எமக்கருள் புரிவாய்
என்தாயே சுந்தர வல்லியானவளே

03 சுந்தரிசோலை நிணல் கொண்ட என் தாயே உன்
துணை என்று வரும் அடியார்க் கருள் புரியுமம்மா
அந்தரி ஆயிரம் கண் அரும்புற்றிலுறையும்
அன்னையே நாகம்மையான என்தாயே
மந்திரத்துக் கெட்டாதமரகத வல்லி உன்
மகிமையறியாதுலகில்வாழ்வாரு முண்டோ
செந்திருவே அந்தரியேசிவலோகத்தாயே
திருவருள் செய் மீனாட்சியான என் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04 தாயாரே உன்தனை நினைப்பவர் தமக்கு
தாழ்வற்ற வறுமை பிணி நோயகல வைப்பாய்
வாயாரப் பாடியே வணங்கிவரும் மக்கள்
மனம் தனிலே நினைத்து கண்ணீர் சிந்தும்பெண்கள்
ஓயாது வந்து உன்சேவை நிதம் புரிவோர்
ஒரு மனது திடமுடனேமலரிடும் மக்கள்
நீதாயே கண்பார்த் தருள் புரிய வேணும்
நித்தம் அருள் புரிகின்ற மீனாட்சியம்மா

05 அம்மா உன் அருள் பார்வை இங்கு நிறையாதோ
அடியவர்கள் குறைபலவும் விட்டு அகலாதோ
உன் கண்பட்டு கயவர் குலம் கெட்டு அழியாரோ
காமாட்சி உன் அருள்கண்டு மக்கள் புகளாரோ
மின் போன்ற ஒளி கொண்ட அங்கயற்கண்ணி
மிதுலை நகரம்மையே மதுரை புரிக்கரசி
அன்போடு மலரிட்டு பணியுமடியார்க்கு
அன்னையே மீனாட்சி அணைத்து அருளம்மா

06 அணைத்து அருள் புரிகின்ற கரமுடைய செல்வி
ஆலையடி புற்றுறை அன்னை நாககன்னி
இணைந்தரனை லிங்கமாய் பாதுகாத்தவளே
ஈஸ்வரியே மடப்பிட்டி இருக்கும் மாதரசி
துணை என்று உந்தனை நம்பினோமம்மா
துயரற்ற வாழ்வுதா எங்கள் மாதாவே
அணையாத ஒளிபோன்ற என்மீனாட்சியம்மா
அருள் புரிந்தருளுவாய் ஆளுடையநாச்சி

07 புரிந்தரசி புரிகின்ற பூவைநீயலவோ
புதுமை செறிபுற்றுறைத் தெய்வம் நீயலவோ
அருந்தானம் குன்றாது உன் ஆலயம் தன்னில்
அன்னையே உண்மைக்கு உண்மை நீயலவோ
பெறுமனது உடைய என்பெற்ற தாயலவோ
இப்பிள்ளைசெய்குற்றம் பொறுப்பதும் அலவோ
இருகை ஏந்தி உனை இறைஞ்சினோமம்மா
என் தாயே மீனாட்சி ஏளையற்கருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08 அருள்கண்டு அன்னையர்கள் குரவையது போட
ஆதவன் ஒளிபோலும் அன்னை ஒளிவீச
இருள் ஓட பகை ஓட என்னம்மை ஆட
இங்கு இருகன்னியர்கள் எழுந்து நடமாட
தருதிமிதி திமி எனத் தாளமது போட
தந்தனத் தானா என என்றடியார் பாட
ஒரு நிமிடம் அன்னையே ஓடிவா தாயே
ஓங்கார சக்தியே உலகநாயகியே

09 நாயகி உந்தனிட ஆலயமே வந்தால்
நலிவுறுசெய் உடல் பல நோய் தீரு மென்தாயே
நேயமுடன் உந்தனை நினைந்து வலம் வந்தால்
நிச்சயம் தப்பாது வெற்றியது உண்டு
ஆலயவாசலில் அமர்ந்திருந்தாலும்
அம்மையே உன் புனித அருள் வந்து வீசும்
வாலையாய் இருந்தம்மா அடியார்க்கு அருளே
வண்ண மகள் மீனாட்சி மாட்டுப்பளச்சி

10 மாட்டுப்பளை மடப்பிட்டி மங்கைக்கு ஓலம்
மருவு செறி மரகத வல்லிக்கு ஓலம்
நாடாண்ட ஆளுடை நாச்சியார்க் ஓலம்
நங்கையைக் காத்திடும் நாகத்திற் கோலம்
தேடியும் காணாத மதுரை வல்லிக்கு ஓலம்
சிறிசோம சுந்தரர் சொக்கருக்கோலம்
அடிதேடி முடிதேடும் மால் அயனுக்கும் ஓலம்
அன்னை குடிகொண்ட கல்லாலைக்கும் ஓலம்

11 கல் ஆலை கீழ் உறையும் கற்பகவல்லி உயர்
கருநாகம் மணிபூண்ட காரிகை நீயே
நில்தாயே பூமடை பூப்பந்தல் மேலே உன்
நிறைவுதிரு மனங்கொண்டு குளிரு மென்தாயே
நல்லாரை நிதம் சேர்த்து ஒழுங்கு செய்தாயே
நாளுமுன் பணிசெய்ய அருளுமென் தாயே
இல்லார்க்கு இரங்கியருள் மடப்பிட்டியம்மா
என்தாயே மீனாட்சி போற்றினோமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 போற்றினோம் பாதமலர் பூக்கள் சொரிந்தோம்
புற்றுள்ள சேடர்க்கு பாலமிர்தம் வைத்தோம்
ஏற்றியே உன்கோயில் வலமாக வந்தோம்
ஈஸ்வரியே எம்மீது உன் அருள் பார்வைபாரும்
நாற்றிசையும் உன்புகழ் போற்றிடவே மக்கள்
நாலாறு பகுதியாய் வந்து தலம் நிரம்ப
காத்திடு அன்னையே மீனாட்சி என்போர்க்கு அம்மா
காமாட்சி உன் பாதம் போற்றினோமம்மா

13 போற்றினோம் புற்றுவலம் வந்தவர்கள் போற்றி
பூசை செய் அந்தணரகள் தொண்டர் தாழ் போற்றி
ஏற்றியே கற்பூரம் இட்டவர்கள் போற்றி
என்னாளும் தாய் தனை நினைத்தவர்கள் போற்றி
நாற்றிசையும் அன்னையைப் புகழ்ந்தோர்கள் போற்றி
நராயணி அறப்பணிக் குதவினோர் போற்றி
ஆற்றொண்ணா நோய் பிணி மாற்றிவிடு தாயே
அன்னையே மீனாட்சி உனைப் போற்றுகின்றோமே

14 போற்றிசிவ மதுரேசர் சொர்க்கர் தாழ் வாழி
பொன்மகள் ஆளுடை நாச்சியார் வாழி
சாற்றியே வெண்நீறு தரித்தவர்கள் வாழி
தாயாரின் தலமுற்ற விருஷ்சங்கள் வாழி
நாற்றிசை போற்றும் வன்னிய ராஜசிங்கனும் வாழி
நாயகி கோதையுடன் நல்லோர்கள் வாழி
கீர்த்திமிகு தமிழ் மரபு தளைத்தோங்க வாழி
கிளி ஏந்தும் மீனாட்சி வாழ வாழியதே

15 வாழிமிகவாழி மங்கையர்கள்தான் வாழி
வரிசைசெரி அந்தனரும் வன்தொண்டர் தான் வாழி
கற்றவரும் வாழி கவி பாடினோர் வாழி
கரம் ஏந்திப் பணிகின்ற கன்னிகைகள் தான் வாழி
மட்டறக் கேட்டோர் மகிழ்ச்சி எழத்தான் வாழி
வட்டை நடு வாழ்கின்ற மதுரை மீனாட்சி தான் வாழி
வாழியவே வாழி அம்மை மகிழ்ச்சியுறவே வாழி
வாழ்க பல்லாண்டு தமிழ் வாழ வாழியவே

**மீனாட்சியம்மன் காவியம்**

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சி அம்மன் அருள் பாமாலை

## துதி

திருச்சிற்றம்பலம்

வேழமாமுகத்து வினாயகனே ஐங்கரனே
ஞானமெனக்களிக்கும் நற்கன்றே - குஞ்சரனே
சீலமாய் அருள் மாலை மீனாட்சி மீதினிலே
செப்பிடவே முன்னிற்பாய் சிவ சுதஅற்புதனே

## மாலை

அ.1 அம்மையரே உந்தனிடஅருளைத் தாதா
அடியேன் நான் பாடிடவும் வரத்தைத் தாதா
இம்மை தனில் ஏளை உன் பாதம் போற்றி
இருகை குவித்து உன்னை இறைஞ்சுகின்றேன்
கண்ணுக்குள் மணியாக இருக்கும் தேவி
எம்கருத்ததனில் செந்தமிழ்ப்பா ஊற்றைத்தாதா
மண்ணுக்குள் மறைந்திருந்து அருளும் தாயே - அம்மா
மனோன் மணியே மீனாட்சி அருள் செய்வாயே

ஆ.2 ஆதியிலே வன்னியனாம் ராசசிங்கன்
அவன் மனைவி கோதையரும் கோயில் கட்டி
நீதி தவறா துலகை ஆண்டு கொண்டு
நித்த பரிபாலமும் உனக்கே செய்தார்
வேதியரும் பூசகரும் ஆண்ட காலம்
விட்ட கன்று போனதம்மா அவர் ஆட்சியோடு
நாதியற்றுப் பல காலம் மண் மேடாச்சே - அம்மா
நல மருளும் மீனாட்சி அருள் செய்வாயே

இ.3 இப்படியே ஆண்டு பல ஆண்டு சென்று
இடம் மாறி தடம் மற்றுப் போனதாலும்
செப்பமடன் திருப்பணிசெய் சிலைகள் தானும்
சீர் மூடி மண் மறைந்து புற்றுண்டாக்கி
சொர்ப்பனத்தில் தொண்டருக்குத் தேவி தானும்
சொல்லறவே சிலை லிங்கம் இடத்தைக்காட்டி
சர்ப்பம் வைத்துப் பூசித்த தாயே வாரும் அம்மா
தாழ்தொழுதோம் மீனாட்சி அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. 4 ஈடில்லாப் புகழ் கொண்ட எங்கள் தாயே
இங்கு குடி கொண்டிருப்பதைக் கண்டு மக்கள்
ஓடி வந்து உந்தனிட ஆலயத்தை
உகப்புடனே சீர் செய்து பல கிராம மக்கள்
தேடிவந்து அறபணியும் தொண்டு செய்வோர்
தினம் கூடி ஆலயத்தை மிளிரச் செய்தார்
வாடுகின்ற மக்களுக்கு வரங்கள் தாரும் - அம்மா
மதுரையர்க் கரசியரே அருள் செய்வாயே

உ.5 உமையே உன் அருள்னோக்கால் உந்தப்பட்டு
உன் சேவை பெரிதென்று திடமும் கொண்டு
வரும் கருமம் அத்தனையும் உனதால் என்று
மனம் நோக தன்புடனே அறப்பணியும் செய்தேன்
சுமைபெருக மனம் தளர அடியேனென்னைச்
சோதிப்ப துனக் கழகா மதுரை அம்மா
இமையவர்கள் நிதம் துதித்துப் பணியும் தேவி - தாயே
ஈஸ்பரியே மீனாட்சி அருள் செய்வாயே

ஊ.6 ஊமை தனை பேசுவித்த தெய்வம் நீயே
உலகு தனை ஆண்ட பெரும் தாயும் நீயே
தீமை பகை நெருங்காத தெய்வம் நீயே
சித்து பல காட்டி அருள் செல்வி நீயே
தாமதித்து துட்டர்களை தண்டிப்பாய் நீ
சதிராடும் நாகமதாய் எதிர் நிற்பாய் நீ
ஆல நற்சோலை தனில் அமர்ந்த தாயே - அம்மா
அரை நிமிடம் அடியார்க்கு அருள் செய்வாயே

எ.7 என் விதியின் பயன் தானோதந்தை தாயின்
எப்பழியோ முற்பிறப்பில் எடுத்துக்கொண்ட
முப்பழியோ என் மூதாதை வாங்கிக் கொண்ட
முழுகடனோ அறியேனம்மா மூடனானும்
உன் பணிக்கு ஆளாகி வாரா வாராம்
ஓடி வந்து தொண்டு தெய்தேன் உமையே என்னை
எப்பிறப்பும் உம்மோடு இருக்கத்தாயே - அம்மா
என் தாயே மீனாட்சி அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.8 ஏளையம்மா என் கையில் பொருள்தானில்லை
என் தாயார் தந்தை வழிக் காணியில்லை
வாழ்வதற்கு வரன் கையில் கொடுப்பதற்கோ
வளியில்லை வயதேறிப் போகுதம்மா
நீ மனது வைத்தாக்கால் என்னைப் போன்ற
நிலைமையுள்ள குமரனைத்தும் வாழுமம்மா
தாயே என் மீனாட்சி தயவு கூர்ந்து - அம்மா
தத்தழிக்கும் கன்னியர்க்கு அருள்செய்வாயே

ஐ.9 ஐயகோ உன்னை நிதம் மாற்றாரெல்லாம்
அவமதித்துத் தூற்றுகின்றார் அம்மா நாளும்
மெய்யாக இவர்களுக்கு ஏதும் கேடு
விரும்பி அவர் உண்மை என்று கண்ணால் காண
வை தாயே வடுவொன்று மாறாது நிற்க
இவன் மனைதனிலே நாகமாய் ஆடுதாயே
கைகுவித்துப் போற்றுகிறேன் மதுரைத்தாயே அம்மா
கடைகண் பார்த்து நிதம் அருள் செய்வாயே

ஒ.10 ஒளிவிளக்கே காணத வீடு மானேன்
ஓர மதில் ஒளுகுகின்றகிடுகு மானேன்
பழி சொல்லும் கதியற்ற பாவையானேன்
பகலிரவு அழுதழுந்த விழியுமானேன்
அணிவதற்று ஆடையற்ற அமலையானேன்
அம்மையரே எனது நிலை பாரேனம்மா
ஒளிதந்து இருளகற்றும் தெய்வமானால் அம்மா
ஓங்கார மீனாட்சி அருள் செய்வாயே

ஓ.11 ஓம் என்று எத்தனை பேர் வாய் மொழிந்தார்
ஒருத்தர் கூட உன் பணிக்கு வந்தாரில்லை
நானும் தான் நல்லவனா இல்லை இல்லை
நடு வீதி வளி பறித்த துரோகியம்மா
ஏனுந்தான் எத்தனை நீ தட்டித் தட்டி
எளுப்புதற்கு உரிமையுண்டோ எங்கள் தாயே
காணுதற்கு எட்டாத முடி கொண்ட தாயே அம்மா
கற்பு செறி மீனாட்சி அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔ.12 ஔவுகின்ற அரவமதைப் பூண்ட தாயே
அவனி எனும் மதுரை நகர் ஆண்டதாயே
கௌவுகின்ற நாய் நரியும் சேடன் தானும்
கடுவிஷங்கள் தீருமம்மா உன் மண்பட்டாலே
உவ்வென்ற ஓங்காரி உமையே சக்தி
ஓடிவந்து அடியேற்கு அபயம் தாரும்
நில்லம்மா என் எதிரே காணுதற்கு - தாயே
நிதம் போற்றும் மீனாட்சி அருள் செய்வாயே

ஃ.13 அஃகரமே அணிந்த சிவனின் தேவி யம்மா
அடிமையம்மா உன்னை நிதம் பணியும் தொண்டன்
தீங்ககற்றி சவ்பாக்கியத்தோடு வாழ
திருக்கண் புரிந்து அருள் தருவாய் தாயே
ஆங்கார நடைஉடைய அன்னை உந்தன்
ஆலயத்தின் வலம் வருவோர்க் அருளைக்காட்டு
தீங்கறியேன் மதுராபுரிக்கரசித்தாயே - அம்மா
சித்தி தந்து அடியார்க் கருள் செய்வாயே

ச.14 சங்கரியே அங்கயற்கண் ணானதாயே
சகலகலா தேவியரே உலக மாதா
இங்கு உன் ஆலயத்தில் வலமாய் வந்தால்
எதிரொலியும் மலர் மணமும் வீசுதம்மா
தங்குகின்ற பறவையினம் விருட்சமீது
தானோசை புரியுதம்மா குரவையாக
பொங்கு தற்கு மக்கள் இங்கு வாரா வாரம் அம்மா
பூப்போடும் கன்னியர்க்கு அருள் செய்வாயே

சா.15 சாமத்தில் மணி ஓசை குழலின் ஓசை
சாம்பிராணி புகை மணமும் ஆலயத்துள்
ஞானத்தில் இருப்பவர்கள் கண்டு கொள்வார்
நாயகியே நாமறியோம் எங்கள் தாயே
காலத்தால் அழியாத தெய்வம் நீயே
கல் ஆலை கீழ் உறையும் மதுரையம்மா
சூலத்தில் நடனமிடு பரமன்தேவி- தாயே
துயரகற்றி மீனாட்சி அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.16 சிவனோடு திரு நடனம் மாடித்தில்லை
திருக்காட்டில் தவமிருந்த தேவிநீயே
சமனாக உடல் பாதி கொண்ட தாயே
தலைவணங்கிக் கும்பிட்டேன் வாருமம்மா
பலவாரம் உன் தலத்தை பணிந்து கொண்டு
பாதமதில் மலர் சொரிந்தேன் என்குறையைத்தீராய்
உளமாற உமையுன்னை அழைத்தேனம்மா- தாயே
உலகாளும் மீனாட்சி அருள் செய்வாயே

சீ.17 சீடனம்மா உந்தனர்க்கு தொண்டும் செய்யும்
திருவேலைக் காறனம்மா ஆலயத்தை
கூடல்போல் ஆக்கிவைக்க மனதிலுள்ளே
குமுறுதம்மா ஏழையான் என்ன செய்வேன்
வாடாத மலரணியும் மகேசன் தேவி
வரும் கருமம் நாம் மறியோம் மதுரைத்தேவி
சோடாகத் சேடன் உறை மடத்துத்தாயே-அம்மா
துணைபுரிந்து அடியார்க்கு அருள் செய்வாயே

சு.18 சுற்றத்தார் மனை மக்கள் தூற்றுகின்றார்
சுந்தரியே பாருமம்மா அன்பனென்னை
பற்று வைத்து உன்மீதுப் பாடி ஆடித் தெருவில்
பல நாளும் இப்படி நான் திரிவதாலோ
இற்றைவரை விட்டனில்லை இராப்பகலாய்
என் தாயே நினைந்து கை சிரசில் வைத்தேன்
வற்றாத அருள்ளாட்சி பொழியும் தேவி-அம்மா
வரம் தந்து அடியார்க்கு அருள் செய்வாயே

சூ.19 சூரியனோ சந்திரனோ அம்மா உந்தன்
துதி பெருகும் இரு கண்ணோ முகங்கள் தானே
வாரி அருள் வழங்குகின்ற இருகை மேனி
வடிவழகைச் சொல்லுதற்கு இயலாதம்மா
நேரிடையாய் வாருமம்மா அடியேன்முன்னே
நின்தவிப்பைக் காணாது இருப்ப தென்ன
சேரிதனில் தனியாக உறையும் தேவி-அம்மா
திகளொழியே மீனாட்சி அருள் செய்வாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.20 சென்னல் விளை வயல் வெளியில் கோயில் கொண்டாய்
சிறியேன்யான் அழைப்பது உன் செவி கேளாதோ
அன்னையரே அழகு முகம் திரும்பிப்பார்த்தால்
அருமையது குறையு மென்றிருக்கின்றாயோ
இன்னுமென்ன தாமதமோ எழுந்து வந்தால் உன்
இரு பாதம் நொந்திடுமோ எங்கள் தாயே
பின்னுமென்ன மீனாட்சி பித்தனென்னை- அம்மா
பெற்றவளே அணைத்து அருள் புரிகுவாயே

சே.21 சேடன் குடி கொண்டரசிபுரியக்கண்டேன்
திருக் கூட்ட அடியார்கள் சேவைகண்டேன்
ஆலையின் கீழ அம்மையின் தன் உருவங்கண்டேன்
அருள் சொரியும் ஒரு கரத்தில் கரும்புகண்டேன்
வாலை திரு புவனையின் தன் வசியம் கண்டேன்
மதிவதன நடை கண்டேன் மகிழ்வு கொண்டேன்
சோலை உயர் அரும் புற்றின் சோதிகண்டேன்-அம்மா
துதித்து உனைப் போற்றினேன் துணைசெய்வாயே

சை.22 சைவத்தமிழ் மரபழகி பாண்டியர் போல்
சமனாக அரசாட்சி புரிந்த தாயே
வையகத்தோர் தங்களுக்கு மனிதராகி
வந்து அவதரித்து புகழ் மாறா நின்றாய்
சுந்தரஞ் சேர் வன்னியனாம் ராசசிங்கன்
துணைவி நற்கோதை அவ துதித்த தாயே
மந்திரத்துக்கெட்டா பளை மடப்பிட்டிவாழும் - அம்மா
மகேஸ்வரியே மீனாட்சி அருள் செய்வாயே

சொ.23 சொரிகின்ற மழை இருளோஅம்மா உந்தன்
துகில் கூந்தல் சடை முடியின்அழகுதானோ
எரிகின்ற ரெத்தினம் இரு காது மூக்கில் மின்ன
என்னாளும் புன்னகைத்த அமிர்தவாயும்
சரிகின்ற மாலைகளும் தங்க முத்தும்
தானணிந்த தாவடமும் தண்டைக்காலில்
கொலுசுகளும் நாகமணி உடைய தாயே - அம்மா
கும்பிட்டேன் மீனாட்சி அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.24 சோலைதன் ஆலநிழல் அமர்ந்த தாயே
துதிப்போர்க்கு அருள் காட்சிகொடுத்தமாதே
பால்வார்த்து பொங்கலிட்டோம் பூக்களிட்டோம்
பதிவந்துன் நேர்த்தியிட்டோம் பாரேனம்மா
ஆல் விழுதின் கீழிருந்து அழைத்தேனம்மா
அரை நிமிடம் உந்தனிட அருளைக்காட்டு
கால் பாதம் நோகுதம்மா அடியேனுக்கு - தாயே
கடைத்தேற மீனாட்சி அருள் செய்வாயே

சௌ.25 சௌவும் மௌவும் நமவெனவே நின்ற சக்தி
சகல கலை உயிர்களுக்குள் நின்ற தேவி
உவ்வும் நவ்வும் ஐயுமென உரைக்கலானென்
ஓம் அவ்வும் றியுமென ஓடி வராய்
நில்லம்மா றிங்காரி இவ் வேளை முன்னே
நிலை குலைய வையனடி என்எதிரிதன்னை
கல்மனது கரையலையோ உந்தனர்க்கு அம்மா
கடுகளவு மீனாட்சி அருள் செய்வாயே

ச்.26

இச்சை கொண்டு உன்னடியார் போற்றிசெய்ய
இரு தாழில் மலர் சொரிந்துஇன்பங்கொள்ள
அச்ச மற்று வாழுதற்கு தங்கை தாய்மார்
அவர்கள் நிலை உயர்வடையகண்பாரம்மா
நிச்சயமாய் தொண்டு உன் பூசை செய்வோர்
நிறைந்த மனதருளுமம்மா நீடுவாழ
உச்சிதமாய் உயர்புற்று நாகம் போற்றி
உயர்வடைய உன் தலத்தைப்போற்றினேன்



**மீனாட்சி அருட்பாமாலை**

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சி அம்மன் சிறப்புக் கும்மி

தரு

தந்தனத் தான தன தான தன
தான தந்தனத் தானா னா
தந்தனத் தான தன தான தன
தான தந்தனத் தானா னா

கும்மி

1. அப்பனே வேழமுகத்தவனே சித்தி
ஐயங்கரனே ஞான பண்டிதனே
செப்பமுடன் நாவில் முன்னிற்க வாருமென்
சித்தி வினாயக அற்புதனே

2. அற்புதம் காட்டிடும் அம்மை மீனாட்சிமேல்
ஆனந்தமாய் கும்மி பாடுதற்கு
சொற்பிழை போக்கிடு வேல் முருகா உன்
துணையை நாடினேன் மால் மருகா

3. மால் மருகா சோலைவாழ் குகனே பச்சை
மாமயில் ஏறிடும் சண்முகனே
மாட்டுப்பளை எனும் மடத்துப்பிட்டியுறை
மங்கை மீனாட்சியைப் போற்றுகின்றேன்

4. போற்றினேன் புற்றுறை நாகம்மையே ஒரு
பொல்லாப்பு வாராது காருமம்மா
நாற்றிசை பக்கமும் காவல் இருந்திடும்
நாணரசே நீயும் முன்வருவாய்

5. முன்வாரும் கண்ணகைத்தாயாரே சிறு
மூடன் நான் அம்மையின் மேற்பாட
கண்பார்த்தருள் புரி கற்புள்ள செல்வியே
காரைநகர் உறை உத்தமியே

6. உத்தமியே எங்கள் ஊர்நடுவாழ்ந்திடும்
ஓங்காரசக்தியே மாரிமுத்தே
நித்தம் பணிந்தேனே தென்முகக்காளியே
நின்பாதம் அன்புடன் போற்றுகின்றேன்

7. போற்றிடலாம் பெண்ணே ஓர் முறை வந்தாலும்
பேரசியருள் கண்டிடலாம்
சாற்றிடலாம் மஞ்சல் தாயாரின் வீதியில்
தானாகத் நாகங்கள் வந்து போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. போகாத பக்கங்கள் போகாதே பெண்ணே
புற்றெல்லாம் தாயாரின் பெட்டகண்டி
ஆதிய அம்மையின் கோயில் அழிந்தனர்
ஆச்சியும் மண்ணில் மறைந்தனளே

9. மறைந்திருப்பவள் மீனாட்சி ஆல
மரத்தில் வாழபவள் காமாட்சி
அறம் தாங்கின்ற தெய்வமும் மீனாட்சி தாயே
அண்டினோம் தந்திடு நல்லாட்சி

10. நல்லாட்சி செய்தவள் நங்கையம்மா சோலை
நன் நிணல் தங்கிடும் தெய்வமம்மா
உன்னாட்சி இங்கு இருக்குதம்மா சேடன்
உத்தமியே உன்னைக் காக்குதம்மா

11. காக்குது ஐந்த தலை நாகம் தாயில்
காலில் படுக்குது வெண்ணாகம்
பார்த்து வலம் வரும் போதினிலே அம்மை
பாதக் கொலுசொலி கேட்குமடி

12. கேட்டால் கிடைத்திடும் நல் வரங்கள் தாயார்
கிருபை உண்டானால் நன்மை கண்ணே
நாட்டம் நீ கொண்டு நாலு பகல் சென்றால்
நன்மையும் தீமையும் கண்டிடுவாய்

13. கண்டு கொள் அன்னையின் காட்சி பெண்ணே உன்
கருத்தில் எண்ணிடில் நன்மையுண்டாம்
ஒன்றும் தெரியாதென றெண்ணிடாதே பல
ஊரில் அதிசயம் காட்டியிருக்கா

14. ஊர் பல சென்று உடமை கேட்பா பெண்ணே
உன்னையும் சாட்சியாவைத்திருப்பா
ஆரும் தெரியாம அசைந்தாடியே வந்தவ
ஆதி சேடனாக நின்றிடுவா

15. நின்றிடுவா கன்னி மங்கை போல் வந்து
நிமிர்ந்து பாரடி என்னை என்பா
அங்கு இருந்திடும் ஆலை விளுதினில் தேவி
ஆரணங்கு ஊஞ்சல் ஆடிடுவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஆடுங்கடி கும்மிபாடுங்கடி நிதம்
அன்னை மீனாட்சியைப் போற்றுங்கடி
கூடுங்கடிகை கொட்டுங்கடி - தேவி
கோதையாள் கட்டினாள் ஆதியிலே

17. ஆதியில் ஐநூற் றாண்டளவில் பெண்ணே
அரசன் வன்னிய ராசசிங்கன்
வீதியும் அம்மைக்கோர் ஆலயமும் கட்டி
வேண்டும் பொருள் காணி கையளித்தான்

18. பொன் மணி கோதை இவன் மனைவி கண்ணே
போற்றும் ஆழகாப்புரிக்கரசி
செம்படை தன்னுடன் சிங்காபுரிதனில்
தேவியும் வாழந்தனள் மன்னனுடன்

19. மன்னனும் கோதையும் வாழ்ந்த இடம் இப்போ
மங்கையர் கோதையாள் மேடு என்றும்
இன்னும் மடங்களும் வற்றாக் கிணர் பல
ஏற்ற சுமை தாங்கி வைத்தனனே

20. வைத்தனன் கறவைகள் மேய்த்த இடம் மாறி
மாட்டுப் பளை எனத்தான் மருவி
தன்படை வேற்படை கொண்டஇடம் தானும்
செங்கற் படை தானும் ஆச்சுதடி

21. ஆச்சுது மன்னநின் ஆணையினால் பல
ஆலயமும் காணி நீர்ப்பாசனமும்
வாய்க்காலும் காளிகோயிலுக் கீந்தனன்பின்
மாறிக் காளியோடையானதடி

22. ஆனைவெளி வண்ண வதன வெளியுடன்
அழகு தட்டாரப் பிட்டியுமாம்
பள்ள வெளியுடன் பறை வெளி பல
பங்கீடு செய்து அரசாண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஆண்டிடும் போதிலே மன்னவன் தேவியும்
ஆரணங்கு கோதை கண்ணகைக்கு
கண்ணன் வெளி நல்ல கந்தன் வெளியுடன்
கணம் வெளியுமாய் ஈந்தனளே

24. ஈந்தனள் மீனாட்சி ஆலயமும் பரி
பாலனமும் மன்னன் செய்தனையே
ஆழந்து மனது கொண்டாராய் தால் பல
அம்பல உண்மை தெரியுமடி

25. உண்மைக்கு உண்மைதான் பெண்மயிலே இந்த
உத்தமி கோதையாள் பூஜித்ததும்
பின்னும் இவரின் துணைவன் மன்னவன்
பேர்பெற்ற கோயிலைக் கட்டிவித்தான்

26. கட்டி மடத்தடி பிட்டி மீனாட்சிக்குப் பல
காணிகளும் நெற்பூமிகளும்
வட்டை நடுவாக வீதிகளும் போட்டு
மாமன்னன் மக்களில் கையளித்தான்

27. வன்னியராசன் புகழ் ஓங்க மங்கை
மனைவி கோதை அருளோங்க
தன்னகர் அழகா புரி வாழ்க தெய்வத்
தலங்கள் சிறந்தே அருள் பரப்ப

28. அருள் புரிந்திடும் மீனாட்சி பல
அற்பதம் காட்டிடும் ஆலயமும்
தருவுமான கல் ஆலை மரமுதல் நம்
தாகங்கள் தீர்த்திடு நற்கிணறும்

29. நல்லறம் செய்திடு ஊளியரும் பணி
ஆற்றிடு தொண்டர்கள் மங்கையரும்
இல்லறமற்ற துறவிகளும் தாயை
எண்ணி நடந்திடு அன்பர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. அன்பர்கள் நெஞ்சினில் கொண்டாடும் பாடல்
ஆகியோன் வினாயக மூர்த்தியம்மா
கண் பாத்தருள் புரி மீனாட்சி - கவி
கற்ற பெரியோர்க்கு வாக்கருளே

31. வாக்கருள் தந்திடு மீனாட்சி உந்தன்
வார்த்தையில் பொய்யுரை இல்லையடி
நீக்கற பாடல் நிலைத்திருக்க புலவன்
நின்னடி போற்றினேன் போற்றினேனே

32. போற்றும் மடத்தடி மீனாட்சி ஆலய
புற்றுறை நாகங்கள் அத்தனைக்கும்
ஏற்றியே கற்பூரம் இட்டுக்கைகுவித்துனை
என்னாளும் போற்றியே போற்றியம்மா

33. மங்களம் மங்களம் மங்களமாம் எங்கள்
மதுரை மீனாட்சிக்கு மங்களமாம்
எங்கும் அருள் கொடு மடத்துப்பிட்டியுறை
என் தாய் மீனாட்சிக்கு மங்களமாம்

34. மங்களம் மங்களம் மங்களாம் பாடும்
மங்கையர் தங்கையர் தம்பியர்க்கும்
குங்குமமிட்ட சுமங்கலி அன்னையர்
கூடிப் பாடுவோரக்கும் மங்களமே

35. கன்னிகள் வாழ நல் மங்களமாம் தேவி
கால் தனில் பூப்போட்டோர் மங்களமாம்
வன்னியன் ராசசிங்கன் கோதையும் போற்றிய
மாபதி கண்டோர்க்கு மங்களமாம்

**மங்களம் மங்களம் சுப சோபன மங்களம்**

.....................................

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரையம்மா மீனாட்சி மனதிரங்காயோ

...............................

மதுரையம்மா உனது மனம் இரங்க ஒண்ணாதோ
மக்கள் உனை அழைப்பதும் உன் செவியும் கேளாதோ
நிரைநிரையாய் நிற்கும் எமை நிமிர்ந்து பாராயோ
நேரில் வந்து அருள் எமக்கு தரவும் ஒண்ணாதோ
மதுரையம்மா மீனாட்சி

ஆலை நிணல் கீழ் இருக்கம் அழகுத் தெய்வமே எம்
அழு குரலை கெட்டிடவும் ஆசையோ தாயே
உளமறியப் போற்றி உமை அழைக்கிறோம் அம்மா
ஓடிவந்து எமது குறை தீரடி நீயே தாயே
மதுரையம்மா மீனாட்சி

நிலவு புனை சடையோனின் இடப்பாகம் நீ பெற்றாய்
நினைந்து உனை வருந்துவரின் குறைகளைத் தீர்ப்பாய்
பல கலையின் ஒரு கலையாய் நின்றவள் நீயே தாயே
பார் போற்றும் மீனாட்சி ஓடிவாதாயே
மதுரையம்மா மீனாட்சி

சேடன் புற்று உறை திருவே சீமாட்டி நீயே நாகம்
திருக்குடையும் பிடிக்குதம்மா மீனாட்சித்தாயே
பாடுகின்றோம் பரவுகின்றோம் அங்கயற்கண்ணி தாயே
பால் அமிர்தம் தாருமம்மா சுந்தரவல்லியம்மா
மதுரையம்மா மீனாட்சி

சுற்றிவந்து தோத்தரித்தோம் சுந்தரரேஸ்வரி ஒரு
சோர்வு அற்ற நல்லறம் தா சோதி மீனாட்சி
பற்றுவைத்து பணிந்து போற்ற உன் பார்வைதா தாயே
இப்பாவையர்கள் பாடுகின்றோம் கேளடி நீயே அம்மா
மதுரையம்மாமீனாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கி எனை அணைத்திடு தாயே

நித்தம் நித்தம் என் மனதில் நிற்பதுமேனோ
நினைவினிலே அருளமுது புரிவதுமேனோ
உத்தமியே மீனாட்சி ஓடிவா தாயே - சேயேன்
ஓலமிட்டுப் பாடுவதைக் கேளடி தாயே
நித்தம் நித்தம்

அடிமனது உள்ளிருந்து ஆட்டுவதேனோ - என்
அங்கமெல்லாம் அசைய வைக்கும் உந்தன் ஆணையோ
பிடிநடையும் இடைதவள ஓடிவாதாயே கொஞ்சம்
பின் திரும்பி கண்ஜாடை காட்டடி நீயே
நித்தம் நித்தம்

அன்னையரே உன் அடிமை நிதமும் வாடவோ நீ
ஆலையடி கீழ் இருந்து அடிமைகொள்ளவோ
பின்னுமென்ன உன்னிரக்கம் என் மீதில்லையோ என்
பெற்றவளே மீனாட்சி ஓடிவா தாயே
நித்தம் நித்தம்

சுற்றிவலம் வருவதற்கு துடிக்குதுதாயே மனம்
சோர்வு செய்து இடைஇடையே தடுக்குதுதாயே
பற்றி மனம் வைப்பதற்கு பாரடி நீயே இந்தப்
பாலகனின் அழுகுரலை கேளடி நீயே
நித்தம் நித்தம்

வற்றிவிட்ட உன் மனது ஊற்றெடுக்காதோ அந்த
ஊற்றினிலே நான் நனைந்து ஒடுங்கலாகாதோ
ஆற்று வெள்ளம் போலே அருள் அடித்துச் செல்லாதோ -அம்மா
ஆதரவாய் எனைத்தூக்க கையும் நீளாதோ
நித்தம் நித்தம்

சேற்றினிலே நட்ட மரம் பயனளிக்குமா தாயே
சிறியேன் உன் பாதம் பற்ற நாட்கள் செல்லுமா
கூற்றவனும் கொடுபோமுன் ஓடிவா தாயே உன்
கொடுங்கையிலே தூக்கி எனை அணைத்திடு நீயே
நித்தம் நித்தம்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரங்கால் மண்டபத்தில்

ஆயிரங்கால் மண்டபத்தில் அன்னை மீனாட்சி
அலங்கார பொன்னூஞ்சலில் ஆடும் கண்காட்சி
அவள் ஆடும் கண்காட்சி - மீனாட்சி
ஆடும் கண்காட்சி
ஆயிரம்.............

நவமணி மகுடம் நால்திசையும் மின்ன
நவரத்ன கைகளில் நல்லொளி மின்னிட
ஆயிரம்.............

நாயகன் கழுத்தினிலே நல்ல முத்த வடமாட
நாயகி மேகலையில் நவமணி ஒளிகட்ட
செங்கரம் தன்னிலே பைங்கிளி கொஞ்சிட
அங்கயற் கன்னியை அன்பர்கள் வணங்க
ஆயிரம்.............

நாதஸ்வரம் முழங்க அங்கே நல்லிசையும் வழங்க
வேதமந்திரங்கள் ஓதியே ஸ்துதிக்க
ஆயிரம்.............

நாயகர் சொக்கேசர் பக்கத்தில் களிக்க
நானிலம் வியக்க நன்மைகள் பயற்க
ஆயிரம்.............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

சரணம் சரணம் மீனாட்சி உன்
தாழினை சரணம் மீனாட்சி
அருணன் ஒளி போல் வருபவளே
கல்ஆலை நிணலில் இருப்பவளே
வருணன் மழை எனப் பொழிபவளே பல
வரங்கள் எமக்குத் தருபவளே
சரணம் சரணம் மீனாட்சி

சற்பம் உமக்குத் தாலாட்டும்தலை
தாங்கிச் சேடன் குடை பிடிக்கும்
கற்பகமே எங்கள் கண்மணியே எம்
கருத்தில் ஊற்றாத் திகழ்பவளே
பொற்பாதம் பணிந்தோம் மீனாட்சி உன்
பொன்னடி சரணம் சரணமம்மா
சரணம் சரணம் மீனாட்சி

மண் புற்றினில் வாழும் பொன் மகளே இப்
புவனம் போற்றும் பூமகளே
அற்பதம் காட்டிடும் ஆரணங்கே பெரும்
ஆலையின் கீழ் உறை அன்னையரே உன்
பொற் பாதம் போற்றி போற்றியம்மா நின்
பொன்னடி சரணம் சரணமம்மா
சரணம் சரணம் மீனாட்சி

சுபம்

........

**மாட்டுப்பளை மடத்துப்பிட்டி**

**மீனாட்சி அம்மன் அருட் பாமாலை முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலவர் நா.விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

### ஆக்க தொகுப்பு நூல்களும்:-

| | |
|---|---|
| திருமுருகன் திருப்பாடற் திரட்டு ஆக்கம் | 210.00 |
| குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 310.00 |
| முத்தான முருகன் தோத்திரப்பாடல்கள் | 150.00 |
| திருகோயில் சித்திரவேலாயுத சுவாமி பேரில் போற்றிப் பாமாலை | 60.00 |

### தொகுப்பு நூல்கள்:-

| | |
|---|---|
| வைகுந்த மோட்சமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 70.00 |
| கழுகுமலைப் பத்து | 100.00 |
| சிவ செந்திமாலை | 60.00 |
| ஆதிமூல கெருடப்பத்து | 80.00 |
| சிவமுத்து மணிமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 155.00 |
| சித்தர் ஞான வாலைக்கும்மி | 120.00 |
| வயிரவர் காவியப்பாடல்கள் | 70.00 |
| சனி பகவான் துதி தோத்திரப் பாடல்கள் | 70.00 |
| திருவாசகத் தேன்துளிகள் | 100.00 |
| சிவமுத்துமாரியம்மன் குளுர்த்திப்பாடல்கள் | 135.00 |
| காளியம்மன் காவியகும்மிப்பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 145.00 |
| மண்டூர் முருகன் பவளமணி மாலை | 75.00 |
| வெருகல் பதிவுறை வேலவர் போற்றிப் பாமாலை | 75.00 |
| நாகம்மை புகழ் மாலை | 120.00 |
| பேச்சியம்மன் காவியம், தாலாட்டு, கும்மிப்பாடல்கள் | 120.00 |
| மடப்பிட்டி மீனாட்ச்சி அம்மன் அருட்பாமாலை | 130.00 |
| கடல் நாச்சி அம்மன் காவியப் பாமலை | 120.00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு-01B
077-6538667

விக்டரி அச்சகம் கல்முனை 0770643990

விலை: 130/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org